செ.வெ.எண்: 37/மார்ச் நாள்: 21.03.2016

**இராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வாக்காளர் சேவை மையத்தின் மூலம் பொதுமக்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம் செய்தல், பெயர் நீக்குதல், தொகுதி விட்டு தொகுதி மாறுதல் மற்றும் வாக்காளர் அடையாள அட்டை நகல் ஆகியவற்றிற்கான விண்ணப்பங்களை அளித்து பயன்பெறலாம்.**

**மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வாக்காளர் பதிவு அலுவலகங்களான இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், பரமக்குடி சார் ஆட்சியர் அலுவலகம், உதவி வாக்காளர் பதிவு அலுவலகங்களான அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், இராமநாதபுரம் நகராட்சி ஆணையர் அலுவலகம் மற்றும் பரமக்குடி நகராட்சி ஆணையர் அலுவலகம் ஆகியவற்றில் வாக்காளர் சேவை மையம் (Voter Facilitation Centre) செயல்பட்டு வருகிறது. பொதுமக்கள் மேற்படி மையங்களின் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், திருத்தம் செய்தல், பெயர் நீக்குதல், தொகுதி விட்டு தொகுதி மாறுதல் மற்றும் வாக்காளர் அடையாள அட்டை நகல் போன்றவற்றிற்கான விண்ணப்பங்களை அளித்து பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

பரமக்குடி சுகாதாரத்துறை துணை இயக்குநர் (பொ) மரு.பவானி உமாதேவி

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**